Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 5, 2023

வியாழக்கிழமை ஒக்டோபர் 05, 2023 ஒளி: 09 கதிர் 099 | பக்கம்:07 | வடக்கு,கிழக்கு Free

# அனைத்து ஊடகங்களும் கலந்துரையாட வேண்டும்



சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா அல்லது நாட்டின் சட்டத்திற்கு அமைவாக செயற்படுவதா என்பது தொடர்பில் சமூக ஊடகங்கள் உட்பட இந்நாட்டின் அனைத்து ஊடகங்களும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான 'திவயின' பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியரும் ஆசிரியர் பீடப் பணிப்பாளருமான எட்மண்ட் ரணசிங்கவை கௌரவிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# எகிறியது காஸ்

லிட்ரோ மற்றும் லாஃப் சமையல் எரிவாயுகளின் விலைகள் என்றுமில்லாத வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

12.5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை புதன்கிழமை (04) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 343 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 3,127 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் புதிய சில்லறை விலை 3,470 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 5 கிலோகிராம் மற்றும் 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 63 மற்றும் 137 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2




# பதவிகளை துறந்தார் சிபெட்கோ தலைவர்



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் மொஹமட், புதன்கிழமை (04) முதல் அமுலாகும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

# புதிய திட்டங்களை ஆரம்பிக்கவும்


## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பிரதமர் கோரிக்கை



புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொது போக்குவரத்து அமைப்புகள், குறிப்பாக ரயில்வே போன்ற துறைகளில் புதிய திட்டங்களை ஆரம்பிக்குமாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகாபுமி கடோனோ உடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

தொடர்ச்சி P2



# ஏலம் நடத்துவதில் சிக்கல் தடுமாறுகிறது சுங்கம்

உரிய வரிகளை செலுத்தாமை மற்றும் ஏனைய காரணங்களால் ஆவணங்கள் காணாமல் போனமையால், கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் கொள்கலன்களை விடுவிப்பதில் அல்லது ஏலத்தில் விடுவதில் இலங்கை சுங்கம் சிக்கித் தவிப்பதாக தெரியவருகிறது.

இலங்கை சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட 435 வாகனங்களில் 133 வாகனங்களை உரிய ஆவணங்கள் காணாமல் போனதால் 2023 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க விடுவிக்க முடியாது என்று அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2




# நீதியைக் காப்பாற்று



முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்துக்கு கண்டனத்தை தெரிவித்து யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட்டம் புதன்கிழமை (04) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்–மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் இந்த மனித சங்கிலி போராட்டம் நீண்டிருந்தது.

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சந்தியில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது. சமநேரத்தில் கொக்குவில், கோண்டாவில் போன்ற பகுதிகளிலும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## ஞானசாரருக்கு பொது மன்னிப்பு

# மனுக்களை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் அனுமதி



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம், புதன்கிழமை (04) அனுமதி வழங்கியுள்ளது.

நீதியரசர்களான எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# ஐஎம்எப் முதலாவது மீளாய்வு விரைவில் நிறைவடையும்

## 2ஆவது தவணையை அணுகலாம் என்கிறார் ஆளுநர்




சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வு விரைவில் நிறைவடையும் என்று நம்பிக்கை தெரிவித்த இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, அதனால் நாடு பிணை எடுப்புப் பொதியின் இரண்டாவது தவணையை அணுக முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

பட்டயக் கணக்காளர்களின் 44ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# முல்லை நீதிபதி விவகாரம்: விசேட விசாரணை ஆரம்பம்



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகளுக்கு தடை

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2,888 பரீட்சை மத்திய நிலையங்களில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ள நிலையிலேயே திணைக்களத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறி செயற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



## தனியார் வாகனங்கள் தவிர்ந்த

# இறக்குமதி கட்டுப்பாடு அடுத்த வாரம் தளரும்


தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அடுத்த வாரம் தளர்த்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களில் 'எஸ்' குறியீடுகள் தொடர்பான திருத்தங்கள் திருத்தப்படும் என்றும் தேவையான உத்தரவுகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை சுங்கத்துறையின் வருமானம் வெகுவாக குறைந்துள்ளதாகவும் இது சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதியையும் பாதித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இறக்குமதியை தளர்த்துவது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த உதவும் என தாங்கள் நம்புவதாக இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

## அரச வைத்தியசாலைகளில்

# சிகிச்சை பெறுவோர் கணிசமாக உயர்வு



அரச வைத்தியசாலைகளில் மருத்துவ சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) தெரிவித்துள்ளார். கடந்த ஒன்பது மாதங்களில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 49.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# திரும்பியவர்களை ஏற்றிச் சென்ற லொறி புரண்டதில் 21 பேர் காயம்

*செ.தி.பெருமாள், ரஞ்சித் ராஜபக்ஷ*

மரண வீடொன்றுக்கு சென்றிருந்தவர்களை ஏற்றிக்கொண்டு திரும்பிய சிறியரக லொறியொன்று சுமார் 50 அடி பள்ளத்தில் புரண்டு விபத்துக்கு உள்ளானதில் 21 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் மஸ்கெலியா- சாமிமலை வீதியில் ப்ரௌன்ஸ்வீக் எனுமிடத்தில் செவ்வாய்க்கிழமை (03) இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மஸ்கெலியா, டிக்கோயா-கிளங்கன் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் - காசல்ரீ பிரதேசத்தில் இடம்பெற்ற மரண வீடொன்றுக்குச் சென்றுவிட்டு, பஸ்ஸொன்றில் வந்துள்ளனர்.

அந்த பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக, வாடகை அடிப்படையில் சிறியரக லொறியில் ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சிறிய லொறி விபத்துக்கு உள்ளானபோது, அதில் 23 பேர் இருந்துள்ளனர். அவர்களில் 21 பேரே காயமடைந்துள்ளனர்.

அதில், பெண்கள் 17 பேரும் ஆண்கள் நால்வரும் அடங்குகின்றனர்.

கடும் காயமடைந்த 17 பேர், டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனைய நால்வரும் மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அந்த சிறிய லொறியில், அதிகளவானவர்களை ஏற்றியமையால், லொறியை கட்டுக்கோப்பாகச் செலுத்த முடியவில்லை. இதனால் இவ்வனர்த்தம் ஏற்பட்டது என்றும் லொறியின் சாரதியும் காயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# அனைத்து ஊடகங்களும் கலந்துரையாட வேண்டும்

நாட்டின் ஊடகத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவின் படி ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நாட்டில் ஊடகத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்திய முன்னோடியாக, மூத்த ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவை குறிப்பிடலாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏழு தசாப்த கால ஊடகப் பணியில் ஈடுபட்ட எட்மண்ட் ரணசிங்கவின் ஊடகத் துறை இலங்கையின் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகக் கலையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஆராய்வதன் மூலம் பயனுள்ள ஊடகக் கலையை உருவாக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஏலம் நடத்துவதில் சிக்கல் தடுமாறுகிறது சுங்கம்

இந்த வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் ஒரு தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான இடத்தில் சுமார் 8 கோடி ரூபாயை வாடகையாக செலுத்தி, உரிய வரிகள் மற்றும் அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் அல்லது ஏலம் விடுவதற்கு அனுமதி கிடைக்கும் வரை வைக்கப்பட்டிருந்தன. 2023 ஜனவரி 31ஆம் திகதி முதல் தற்போது வரை 18 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 435 வாகனங்கள் மற்றும் பல்வேறு சரக்குகளுடன் 91 கொள்கலன்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இதில் 261 வாகனங்கள் மற்றும் 86 கொள்கலன்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஐஎம்எப் முதலாவது மீளாய்வு விரைவில் நிறைவடையும்

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தில் அரசாங்கமும் மத்திய வங்கியும் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக முடிந்ததாகவும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் தாம் செய்து வரும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியானது கடன் மறுசீரமைப்பு முயற்சிகளை உன்னிப்பாகவும் விவேகமாகவும் முன்னெடுத்துச் சென்று ஒட்டுமொத்த குடிமக்கள் மற்றும் பெரிய பொருளாதாரத்திற்கு குறைந்த சுமையுடன் உகந்த தீர்வுகளை நாடு பெறுவதை உறுதிப்படுத்துவதாக ஆளுநர் தெரிவித்தார். இந்த அபிவிருத்திகளின் மூலம், நிதி அமைப்பு மற்றும் பெரிய பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் இலங்கை மத்திய வங்கி உறுதியாக உள்ளது என்றார். மேலும் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியானது பொருளாதாரத்தின் அடிப்படையில் வளர்ச்சியை மீட்டெடுக்கும் என்றார்.

# எகிறியது காஸ்

அந்த வகையில், 1,256 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 1,393 ரூபாய்க்கும் 587 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 650 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் எரிவாயு விலை உயர்வினால் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ நிறுவன தகவல்கள் முன்னர் தெரிவித்திருந்தன.

விலை சூத்திரத்தின் பிரகாரம் லிட்ரோ எரிவாயு விலைகள் மாதாந்தம் 5 ஆம் திகதிகளில் திருத்தப்படுகின்ற நிலையில் புதன் (04) நள்ளிரவு முதல் புதிய விலைத் திருத்தம் அமுலாகின்றது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வைப் பிரதிபலிக்கும் வகையில், கடந்த ஓகஸ்ட் மாதம் விலை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் விலை அதிகரிக்கப்படவில்லை.

என்ற போதும் செப்டெம்பர் மாதத்தில் 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாயாலும் 5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 58 மற்றும் 26 ரூபாயால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இந்த விலை அதிகரிப்பு புதன்கிழமை (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்ததென லாஃப் சமையல் எரிவாயு நிறுவனம் தெரிவிக்கின்றது.

12.5 கிலோ கிராம் எடையுடைய லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 3,985 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 5 கிலோ கிராம் எடையுடைய லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 60 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 1,595 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# முல்லை நீதிபதி விவகாரம்: விசேட விசாரணை ஆரம்பம்

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், இதற்காக விசாரணை குழுவொன்றை நீதிச் சேவைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதிச் சேவைகள் சங்கம் பிரதம நீதியரசரை செவ்வாய்க்கிழமை (03) சந்தித்து கடிதமொன்றை கையளித்திருந்தது.

சம்பவத்திற்கான காரணத்தையும் பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கடிதத்தினூடாக பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. சர்ச்சைக்குரிய குருந்திமலை விகாரை வழக்கை விசாரித்த நீதிபதி சரவணராஜா, செப்டம்பர் 23 அன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில், மாவட்ட நீதிபதி, நீதவான், குடும்ப நல நீதிமன்ற நீதிபதி, முதன்மை நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு நீதித்துறைப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தார்.

குருந்தூர் மலை விவகாரத்துடன் தொடர்புடைய வழக்கு, கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான ஆரம்பகட்ட விசாரணைகள் நீதிபதி சரவணராஜா முன்னிலையில் இடம்பெற்ற நிலையில், தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதே அவரது பதவி விலகலுக்கு காரணம் என நீதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பதவிகளை துறந்தார் சிபெட்கோ தலைவர்

இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர் அந்த பதவியையும் துறந்துள்ள அவர், தனது இராஜினாமா கடிதத்தை மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கையளித்துள்ளார்.

தனிப்பட்ட மற்றும் தொழில்சார் கடமைகளை மேற்கோள் காட்டி தலைவர் தனது இராஜினாமாவை கையளித்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் சவாலான சூழ்நிலையில் 14 மாதங்கள் இந்தப் பதவிகளில் பணியாற்றியுள்ளார் என்பதுடன், செவ்வாய்க்கிழமை (03) அமைச்சரைச் சந்தித்து தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார்.

# புதிய திட்டங்களை ஆரம்பிக்கவும்

முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் பின்னர், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இலங்கைக்கு ஆதரவை வழங்கியதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நன்றி தெரிவித்த பிரதமர், விவசாயம், கிராமிய சிறு மற்றும் நடுத்தர துறைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய உதவிகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், பொருளாதார முன்னேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக வங்கியின் இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் குறித்து பணிப்பாளர் பிரதமருக்கு விளக்கியுள்ளார்.

தற்போதைய திட்டங்கள் பொது நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், தனியார் துறை அபிவிருத்தி மற்றும் பொதுச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் உள்ளடக்கம், சமூக பாதுகாப்பு, சமமான அணுகல், சுகாதாரம், காலநிலை மற்றும் விவசாயம் நவீனமயமாக்கல் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது.

திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டங்களின் பகுதிகள் குறித்து ஆராய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளும் சபை உறுப்பினர்கள் இலங்கைக்கு வருவார்கள் என்றும், புதிய திட்டங்களுக்கான பிரதமரின் முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மனுக்களை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் அனுமதி

அரசியலமைப்புச் சட்டத்தின் 12(1) பிரிவின்படி (சமத்துவ உரிமை) மனுக்களை பரிசீலிக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியதுடன், இந்த மனுக்களை அடுத்த வருடம் மே மாதம் 6ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் மற்றும் காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோரால் குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பாக ஹோமாகம நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையின்போது, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஞானசார தேரருக்கு ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கி ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கடிதம் கிடைத்ததையடுத்து 2019ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஞானசார தேரர் வெலிக்கடை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது நீதித்துறையின் நேர்மைக்கு அச்சுறுத்தலாகவும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அமைந்துள்ளதாக மாற்றுக் கொள்ளைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 12(1) பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரியுள்ளனர்.

# சிகிச்சை பெறுவோர் கணிசமாக உயர்வு

கண்டி தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் 6.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இந்த ஆண்டு அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெறுவோர் ஒட்டுமொத்தமாக 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் உள்ளக சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையும் 27 சதவீதம் அதிகரித்துள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் வைத்தியசாலைகளில் அதிகரித்துள்ள செலவீனங்களை பெரும்பாலானோர் ஈடுசெய்ய முடியாத காரணத்தினால், தற்போது அரச வைத்தியசாலைகளில் அதிகளவானோர் சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

## மாற்று யோசனைகளை பரிசீலிப்பதற்கு தயார்

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாற்று யோசனைகளை பரிசீலிக்க தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த ஜனாதிபதி, இரு தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படத் தயார் எனத் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த இக்கட்டான தருணத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஒரு நேரத்தில் பொதுவான கட்டமைப்பின் கீழ் பணியாற்றுவதற்கான நேரம் பொருத்தமானது என்றும் பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு பாராளுமன்றத்தில் இருந்து நிவாரணம் மற்றும் பதில்களை நாடுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சின் கீழ் உள்ள மூன்று உத்தரவுகள் புதன்கிழமை (04) விவாதிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டுள்ளனர்.

## சஜித்துக்கு சபையில் பிஸ்கட் கொடுத்த கெஹலிய

திரிபோஷா தொழிற்சாலை மூடப்படவில்லை. உங்களுக்கு தவறான தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. (மூன்று பிஸ்கட் பாக்கெட்டுகளையும் காண்பித்து) இதை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

குழந்தை இல்லையென்றாலும், இந்தக் குழந்தை பிஸ்கட்களின் மூன்று பாக்கெட்டுகளை உங்களுக்குத் தருகிறேன். அதை சாப்பிட முயற்சிக்கவும். மிகவும் நல்லது. குழந்தைகளுக்கு மட்டுமே உள்ளது. ஆனால் நீங்களும் சாப்பிடலாம். இது இப்போது சந்தையில் கிடைக்கிறது. இதில் தினமும் பத்தாயிரம் பிஸ்கட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. திரிபோஷ தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பற்றாக்குறை ஏற்படவில்லை.

திரிபோஷா நிறுவனத்தால் குழந்தைகளுக்காக தயாரித்த பிஸ்கெட் ஒன்றை பாராளுமன்றத்தின் சபைக்குள் புதன்கிழமை (04) கொண்டுவந்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்த பிஸ்கட்டுகளை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குவதாக தெரிவித்து, படைகல உதவியாளர்களிடம் கொடுத்து அனுப்பியுள்ளார்.

அந்த மூன்று பிஸ்கட் பெக்கெட்டுகளையும் சபைக்கு காண்பித்த அவர், " திரிபோஷா நிறுவனம் மூடிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் இதற்கு முன்னர் சபையில் தெரிவித்திருந்தார். அவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை. அந்த தொழிற்சாலை இயங்குகின்றது. இந்தா பாருங்கள் அந்த நிறுவனத்தால் பிள்ளைகளுக்கு பிஸ்கட் தயாரிக்கின்றனர். நீங்கள் குழந்தையாக இல்லாவிட்டாலும் உங்களுக்கு மூன்று பெக்கெட்டுகளை தருகின்றேன் என சிரித்துக்கொண்டே கூறியுள்ளார்.

கையிலிருந்து மூன்று பெக்கெட்டு பிஸ்கட்டுகளை தூக்கி காண்பித்த அமைச்சர் கெஹலிய, திரிபோஷா தொழிற்சாலை மூடப்பட்டதாக நீங்கள் தெரிவித்திருந்தமை தவறானது.

நீங்கள் குழந்தை இல்லாவிட்டாலும் இந்த மூன்று பக்கட்டுகளையும் நான் உங்களுக்குத் தருகின்றேன். உங்களுக்கும் சாப்பிட முடியும். சாப்பிட்டு பாருங்கள், நல்ல ருசியாக இருக்கின்றது.

இது இப்போது சந்தைகளில் இருக்கின்றது. இந்த பிஸ்கட்டுகள் நாளொன்றுக்கு 10 ஆயிரம் உற்பத்தி செய்யப்படுகின்றன. திரிபோஷா நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. எவ்விதமான குறைகளும் இல்லை என தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு முதல் தங்கம்

சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தருஷி திஸாநாயக்க தங்கப்பதக்கத்தை தனதாகிக்கொண்டார்.

# வெள்ளத்தில் மூழ்கிய பெரியமுல்லை

எம். இஸட். ஷாஜஹான்



தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர்கொழும்பு பெரியமுல்லை பிரதேசத்தில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதோடு வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததன் காரணமாக பலர் உறவினர் நண்பர்களுடைய வீடுகளுக்கு இடம் பெயர்ந்து இருக்கின்றார்கள்.

பெரியமுல்லையில் தெனியாய வத்த, கோமஸ் வத்த, ரப்பர் வத்தை, கட்டுவ பிரதேசத்தில் புவக்வத்தை உட்பட பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி இருக்கின்றன.

இதேவேளை தழுபத்தை, பல்லன் சேனை வீதியின் ஒரு பகுதி மற்றும் வெளிஹேன பேஸ்லைன் வீதி, வெளிஹேன வீதி, புவக்வத்தை உட்பட சில இடங்களில் வெள்ளத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக பொதுமக்களுக்கு அந்த வீதி வழியாக பயணிக்க முடியாத நிலையும் வாகன சாரதிகளுக்கு அந்த வீதி வழியாக பயணிப்பதில் அசௌகரியமும் ஏற்பட்டுள்ளது.

# சத்திரசிகிச்சைக்கு நிதி திரட்டிய மூவர் கைது

3 மாத சிசுவின் தீராத நோயைக் குணப்படுத்த சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி, நிதியுதவிகளை திரட்டிக்கொண்டிருந்த பெண்ணொருவர் உட்பட மூவர் கினிகத்ஹேன பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


போலியான ஆவணங்களை தயாரித்து நிதியை திரட்டிக் கொண்டிருந்தபோதே, கினிகத்ஹேன பொலிஸாரால் இவர்கள், புதன்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரான பெண், பெண்ணின் சகோதரர் மற்றும் வாடகை அடிப்படையில் அழைத்து வரப்பட்ட நபர் ஆகியோர், முச்சக்கரவண்டியில் ஒலிப்பெருக்கியை பயன்படுத்தி கினிகத்ஹேன நகரத்தில் நிதி திரட்டி கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் சந்தேகமடைந்த கினிகத்ஹேன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அவர்களை அழைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

சந்தேகநபரான பெண்ணின் கணவன், சட்ட ரீதியில் அப்பெண்ணிடமிருந்து விவகாரத்து பெற்றுள்ளார். அதன்பின்னரே இவ்வாறு நிதித் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக அப்பெண் தெரிவித்துள்ளார்.

படத்தில் இருக்கும் குழந்தை, சந்தேகநபரான பெண்ணின் குழந்தை என்றும் அக்குழந்தை சிறு வயதில் இருந்த நோயின்போது எடுக்கப்பட்ட படம் எனவும் தெரியவந்துள்ளது.



எனினும், தற்போது அக்குழந்தைக்கு 8 வயதாகின்றது. பாடசாலைக்கும் செல்கின்றார். குறித்த சிறுமி, தன்னுடைய தந்தையின் பொறுப்பின் கீழ் தற்போது இருக்கின்றார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பிரதான நகரங்களுக்குச் சென்று, அந்த நகரங்களுக்கு அண்மையில் இருக்கும் நகரத்தில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வாடகை அடிப்படையில் முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தி, அதில் சிசுவின் புகைப்படத்தை ஒட்டி, நிதி திரட்டப்படுகின்றது என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.


கைது செய்யப்பட்ட 29 வயதான அந்தப் பெண், வாழைச்சே பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அப்பெண்ணின் சகோதரனுக்கு 28 வயது என்றும் அந்தப் பெண், தன்னுடைய சகோதரியுடன் நாடளாவிய ரீதியில் சென்று நிதித்திரட்டும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

மற்றைய நபர், மூதூர் தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதானவர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபரான பெண்ணின் வங்கி கணக்கில் ஒரு இலட்சத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது. அதுவும் யாழ்ப்பாணத்தில் வைத்து பல சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும், ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த கினிகத்ஹேன பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காட்டு யானை தாக்கி பெண் உயிரிழப்பு



எம். சீ . அன்ஸார்

அம்பாறை - சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு, வம்பியடி பகுதியில் செவ்வாய்க்கிழமை (03) இரவு காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்துடன் கல்முனையில் இருந்து நிந்தவூர் வழியாக இறக்காமம் பகுதிக்கு இரவுவேளை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோதே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் இறக்காமம் பகுதி 9ஆம் பிரிவைச் சேர்ந்த 43 வயதுடைய புஹாரி சரீப் சிபானி என்ற 3 பிள்ளைகளின் தாயார் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சா பொதியுடன் பெண் கைது

றொஸரியன் லெம்பர்ட்

மன்னார்- பேசாலை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட காட்டாஸ்பத்திரி கிராம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் புதன்கிழமை (4) கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரின் சோதனை முன்னெடுத்தபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்

குறித்த பொதியில்



சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், குறித்த வீட்டில் இருந்த 44 வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பேசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாகன சாரதிகளுக்கு அறிய வாய்ப்பு




யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவில் எழுதுதல் வாசித்தல் திறன் குறைத்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சையினை நாளை வெள்ளிக்கிழமை 6ஆம் திகதி நடத்துவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறத்தவறியவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் பிரதம மோட்டார் வாகன பரிசோதகர் G.H.D.K விஜயசேகரா அறிவித்துள்ளார்.

மேலும், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன் A9 வீதி, கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதுடன், மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

## குருக்களின் உதவியாளர் மரணம்: குருக்கள் கைது



எம்.கிருஸ்ணா

நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளவட்டன் தோட்ட பிள்ளையார் ஆலயத்தின அறையொன்றில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சிறுவனின் சடலம், ஹட்டன் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ராமமூர்த்தி பார்வையிட்டுள்ளார்.

அதன் பின்னர் கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு சடலம், செவ்வாய்க்கிழமை (03) மாலை கொண்டுச்செல்லப் பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் ஆலய குருக்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒஸ்பன் தோட்ட கீழ்ப்பிரிவில் வசித்து வந்த எஸ். ஜனநாதன் (வயது 16) சிறுவனே தோட்டத்தின் விநாயகர் ஆலய அறையில் செவ்வாய்க்கிழமை (03) காலை தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இவர் பிரதான குருக்களுக்கு உதவியாளராக பணியாற்றி வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது,

## அரவம் தீண்டி சிறுவன் மரணம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு பகுதியில் பாம்பு தீண்டியதால் 12 வயது பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். தோட்டவாடியில் திங்கட்கிழமை (02) இரவு உறங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே பாம்பு தீண்டியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கமைய மாணவனை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை



பெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (03) மாலை உயிரிழந்துள்ளார்.

மேலும் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்பு தீண்டியதால் குருதியோட்டத்தில்நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து உயிரிழந்திருப்பது கண்டறியப்பட்டது.

## 4 கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

ஹஸ்பர்

திருகோணமலையில் சந்தைப்படுத்த முடியாத அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்த நான்கு கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் செவ்வாய்க்கிழமை (03) சுற்றிவளைப்பை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது சந்தைப்படுத்த



முடியாத அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்த மூதூரில் 3 கடையும் கிண்ணியாவில் ஒரு கடையுமாக நான்கு கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பபட்டுள்ளது.

மேலும், திருகோணமலை நகர் பகுதியில் அரிசி விற்பனை விலை காட்சிப்படுத்தாமையினால் குறித்த கடை உரிமையாளர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

## இரண்டு சிறுமிகள் மாயம்: பொலிஸார் தேடுதல் வேட்டை

நன்னடத்தை திணைக்களத்தின் மேற்பார்வையில் பிபில பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுமிகள் காப்பகத்திலுள்ள இரண்டு சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக சிறுமிகள் இல்லத்தின் உதவி கண்காணிப்பாளர் பிபில பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சிறுமிகள் தெபல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11ஆம் தரத்தில் கல்வி பயின்று வருவதாகவும், பாடசாலைப் பைகளை வகுப்பறையில் வைத்துவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறியதாகவும், சிறுவர் இல்ல உதவி காப்பாளருக்கு அதிபர் அறிவித்ததையடுத்து அவர்கள் திரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, உதவி கண்காணிப்பாளர் பிபில, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

16 வயதுடைய இரு சிறுமிகள் தொடர்பிலான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

சிறுமிகளைத் தேடுவதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பிபில பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## குழந்தை அடித்துக் கொலை: தாயார் கைது

ஆறு மாதங்களும் 11 நாட்களுமே ஆன பச்சிளம் குழந்தையை அடித்துக் கொன்றதாக குழந்தையில் தாய் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்பொக்க - கட்டுவன கெதர பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய பெண்ணொருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி கழுவிக்கொண்டிருந்த போது தவறுதலாக சுவரில் தலை மோதியதாக தெரிவித்து குழந்தை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. பொலிஸ் விசாரணையின்போது குழந்தையை தாய் கடுமையாக தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து, சந்தேகத்தின் பேரில் குழந்தையின் தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மாணவிக்கு கௌரவிப்பு

பு.கஜிந்தன்

“சிறுவர் தலைமையிலான பரிந்துரைத்தல் மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு” எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேள்ட் விஷன் நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்டு, தென்னாசியா மற்றும் பசுபிக் கண்ட நாட்டு பிரதிநிதிகளுடனான மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சிங்கப்பூர் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிக்கு கௌரவிப்பு நடைபெற்றது.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் தரம் பத்தில் கல்வி பயிலும் ஜெயசீலன் குஜிதா என்ற மாணவியே சங்கானை கலாசார மண்டபத்தில் வைத்து புதன்கிழமை (05) கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து மூவர் தெரிவாகியிருந்த நிலையில் தமிழர் தரப்பில் இருந்து குஜிதா மாத்திரமே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச விசாரணைக்கான முற்றுப்புள்ளியும் நிராகரிப்பும்

இலங்கையின் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றஞ்சாட்டி, ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கட்டுக்கட்டான ஆவணங்களுடன் நாட்டில் இருந்து முதன்முறையாகச் சென்றிருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பது யாவருக்கும் தெரியும்.

ஆனால், இறுதி யுத்தத்திலும் அதன் பின்னரும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, சர்வதேச விசாரணைகளை நடத்துமாறு வலியுறுத்திய போதெல்லாம், அதற்கான அவசியம் இல்லை, உள்நாட்டு விசாரணை போதுமென தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

அதற்கு ஆதரவு குரல் எழுப்பியோர், இது இறைமையுள்ள நாடு, இதில் தலையிடுவதற்கு சர்வதேசத்துக்கு இடமளிக்கமாட்டோம், நாட்டைத் துண்டாடுவதற்கு சர்வதேச சமூகம் செயற்படுகின்றது. புலிகளின் கோரிக்கையையே மேற்குலக நாடுகள் நிறைவேற்ற முயற்சிக்கின்றன என்றெல்லாம் கூறியிருந்தனர். இன்னும் கூறிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரின் போதெல்லாம், ஏதாவது சமாளிப்புகளை கூறிவிட்டு, இங்குவந்து இரண்டோர் ஆணைக்குழுகளை அமைத்து, அடுத்த கூட்டத்தொடர் வரும் வரையில் இழுத்தடிப்புகளைச் செய்தனர். ஒரு சில சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டாலும் அவையெல்லாம் தங்களுக்கு சாதகமானதாகவே இருந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதமான விமோசனமும் கிடைக்கவில்லை.

இன்று வரைக்கும் இதே இழுத்தடிப்புகளே மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூர் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை என்பதால்தான் சர்வதேச விசாரணையை கோருகின்றோம் என, பாதிக்கப்பட்ட தரப்பினர் குரல் கொடுக்கின்றனர். மொத்தத்தில் பார்த்தோமெனில், கயிறு இழுப்பே இடம்பெறுகின்றது.

இந்நிலையில் ஜேர்மனியின் *Deutsche Welle* ஊடக நிறுவனத்துக்கு நேர்காணல் வழங்கியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முற்றுப்புள்ளி என்றொரு வசனத்தை பயன்படுத்தியிருந்தார். ஆகையால், நீங்கள் கோரும் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்பதேயாகும்.

சர்வதேச விசாரணை நடாத்த முடியாது என்றும் ஐ.நா மனிதவுரிமைத் தீர்மானங்களை தான் நிராகரிப்பதாகவும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கடும் தொனியில் பதில் வழங்கினார் .

நல்லாட்சி அரசில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்த போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைத் தீர்மானத்தை ஏற்று கால நீடிப்பு பெற்றத்தை மறந்து விட்டார். அப்படியாயின் அன்றைய கால கட்டத்திலேயே நிராகரித்திருக்க வேண்டும். இந்த நிராகரிப்பு, நீதி கோரியிருக்கும் தரப்புக்கு கடும் ஆத்திரத்தை மூட்டியிருக்கின்றது எனலாம்.

இறுதி யுத்தத்துக்கு முன்னரும் பின்னரும், ஏதாவது ஒரு பாரிய பிரச்சினைகளின் போது, குழுக்களை அமைப்பதும் அக்குழுக்களின் அறிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்துவதற்காக ஆணைக்குழுக்களை அமைப்பதும், பரிந்துரைகளை ஆராய நிபுணர் குழுவை அமைப்பதென காலத்தை கடத்திக் கொண்டே செல்லப்படுகின்றது.

அரசாங்கங்களின் இவ்வாறான செயற்பாடுகளினால், பாதிக்கப்பட்ட தரப்பினர், சர்வதேச விசாரணைகளை கோரிநிற்பதில் எவ்விதமான தவறும் இல்லை. அதற்கு ஒவ்வோர் அரசாங்கங்களும் அஞ்சுவதே புதிராகும்




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் சொல்லும் செய்தி!



புருஜோத்தமன் தங்கமயில்

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகி, நாட்டை விட்டு வெளியேறியுள்ள விடயம், நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் பலத்த விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. தன்னுடைய நீதித்துறை செயற்பாடுகள் மீதான அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகுவதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுக்கு நீதிபதி சரவணராஜா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். குறித்த கடிதம், அவர் நாட்டை விட்டு பாதுகாப்பாக வெளியேறிய பின்னர் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. ஏனெனில் அந்தத் கடிதத்தின் படங்கள், அலைபேசியில் எடுக்கப்பட்டிருக்கின்றன.
அவைதான், ஆரம்பத்தில் இணைய, சமூக ஊடகங்களில் வெளியாகின.
அவற்றை, நீதிபதி சரவணராஜா அல்லது அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள் ஊடகங்களிடம் வழங்கியிருக்கலாம்.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் அத்துமீறி புத்தர் சிலை அமைக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகளில் நீதிபதி சரவணராஜா, தீர்ப்புக்களை வழங்கியிருக்கிறார். அதில், சட்டத்துக்கு புறம்பாக குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் அகற்றப்பட்ட வேண்டும் என்கிற விடயம் முக்கியமானது. ஏனெனில், அவரின் இடைக்கால உத்தரவுகள், தீர்ப்புக்களையெல்லாம் புறந்தள்ளி, தொல்பொருள் திணைக்களத்தினால் இராணுவத்தின் பங்களிப்போடு, குருந்தூர் மலையில் பௌத்த கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன. புத்தர் சிலையும் வைக்கப்பட்டது.

தொல்லியல் சிதைவுகள் அல்லது ஆதாரங்கள் குருந்தூர் மலையில் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் கூறுகின்றது. அது, பௌத்த அடையாளங்கள் என்றும் கூறுகின்றது. அதனால், குருந்தூர் மலையில் தமிழ் மக்களினால் காலங்காலமாக முன்னெடுக்கப்படும் ஆதிசிவன் வழிபாட்டினை அனுமதிக்க முடியாது என்ற வாதம் தொல்லியல் திணைக்களத்தினாலும், பௌத்த அதிகார சக்திகளினாலும் வாதிடப்படுகின்றது. குருந்தூர் மலை பௌத்த தொல்லியல் பிரதேசம், அதனால் அங்கு பௌத்த கட்டுமானங்களை அமைப்பதுதான் சரி என்பது, தென் இலங்கையின் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் தொடர் வலியுறுத்தல்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில், வரலாற்று காலம் தொட்டு குருந்தூர் மலையில் ஆதிசிவன் வழிபாடு முன்னெடுக்கப்படுகின்றது. அதனை, எந்தவித இடையூறு இல்லாமல் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பது கோரிக்கை. அத்தோடு, குருந்தூர் மலையில் காணப்படும் பௌத்த தொல்லியல் எச்சங்கள் தொடர்பில் நியாயபூர்வமான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, அவை எந்தக் காலத்துக்குரியவை என்பது அடையாளப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை. ஏனெனில், அங்கு காணப்படும் பௌத்த எச்சங்கள், தென் இந்தியாவிலும் வடக்கு கிழக்கு இலங்கையிலும் தமிழ்ப் பௌத்தம் கோலொச்சிய காலங்களின் எச்சமாக இருக்கலாம் என்பது வாதம்.

பௌத்த தொல்லியல் எச்சங்கள் எங்கு மீட்கப்பட்டாலும் அவை, சிங்கள பௌத்தத்தின் எச்சங்கள் என்பது, தொல்லியல் திணைக்களத்தில் நிலைப்பாடாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் கந்தரோடையில் காணப்படும் பௌத்த எச்சங்களையும் அவ்வாறான கண்ணோட்டத்திலேயே தொல்லியல் திணைக்களமும், அதனை இயக்கும் சக்திகளும் வரையறுக்கின்றன. ஏனெனில், அந்த எச்சங்கள் தொடர்பில் உண்மைத்தன்மை வெளிப்பட்டால், வடக்கு கிழக்கில் தமிழ் பௌத்தத்தின் எழுச்சி வீழ்ச்சி பற்றிய உரையாடல் களம் பிறக்கும். அப்படி, அவ்வாறான உரையாடல்கள் நிகழ்ந்தால், இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு உரியது என்ற வாதம் அடிப்பட்டுபோகும் என்பது தென் இலங்கையின் நினைப்பு. அதற்காக, வடக்கு கிழக்கில் அரச மரங்களைக் கண்டால் அங்கெல்லாம் புத்த சிலைகள் வைக்கப்படுகின்றன. அதுபோல, மலைகள், குன்றுகளைக் கண்டாலும் அங்கு புத்த சிலைகள் வைக்கப்பட்டு, பௌத்த சிங்கள ஆதிக்கத்தின் குறியீடாக அவை நிலைபெறுகின்றன.

இந்த நிகழ்ச்சி நிரலின் போக்கில்தான், நீதிமன்ற உத்தரவுகளை மீறி குருந்தூர் மலையில் பௌத்த கட்டுமானங்கள் செய்யப்பட்டன. வடக்கு கிழக்கிற்கு வெளியே, கண்டுபிடிக்கப்படும் தொல்லியல் எச்சங்களும், பிரதேசங்களும் அவ்வாறே பாதுகாக்கப்படுகின்றன. அங்கு வலிந்த கட்டுமானங்களை தொல்லியல் திணைக்களம் செய்திவ்லை. ஆனால், வடக்கு கிழக்கில் மாத்திரம் அத்துமீறிய கட்டுமானங்களை செய்வது என்பது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. அதற்காக, ஏனைய மதத்தினரின் வழிபாட்டிடங்களை அழித்தல், அகற்றல் என்ற சட்டத்துக்கும் நீதிக்கும் எதிரான செயற்பாடுகளும் தொடர்கின்றன. அவ்வாறான நிலையில், குருந்தூர் மலையில் கட்டப்பட்ட அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பில் நீதிபதி சரவணராஜா வழங்கிய தீர்ப்புக்கள் தென் இலங்கையின் ஆதிக்க சக்திகளை எரிச்சலூட்டின. கொழும்பிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உள்ளிட்டவர்கள், குருந்தூர் மலைக்கு சென்று ஆதிக்க மனநிலையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நீதிபதி சரவணராஜா, குருந்தூர் மலைக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது, அங்கு அத்துமீறி தலையீடுகளைச் செய்ய சரத் வீரசேகர முயன்றார். அதுபோல, பௌத்த பிக்குகள் சிலரின் தலையீடுகள் இருந்தன.

அத்தோடு, நீதிபதி சரவணராஜாவை பொது வெளியில் விமர்சித்து உரையாற்றினால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படலாம் என்ற அச்சத்தினால் சரத் வீரசேகர பாராளுமன்ற சிறபுரிமைக்குள் ஒழிந்து கொண்டு இனவாத உரைகளை ஆற்றியிருக்கிறார். அதில், நீதிபதி சரவணராஜாவை மனநலம் குன்றியவர் என்பது வரை அவர் பேசியிருந்தார். அத்தோடு, தென் இலங்கையின் கடும்போக்கு சக்திகள் நீதிபதி சரவணராஜாவை படுமோசமாக விமர்சிக்கவும் தொடங்கின. இந்தப் பின்னணியில், நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றத்தோடு ஆட்சியதிகார பீடங்களும் சட்டமா அதிபர் திணைக்களமும் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, நீதிபதியை சட்டமா அதிபர் நேரடியாக அழைத்து, குருந்தூர் மலை தொடர்பிலான வழக்கில் தீர்ப்புக்களை மாற்றுமாறு அழுத்தங்கள் வழங்கப்பட்டதாக தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இந்தத் தகவல்களின் உண்மைத்தன்மையை நூறு வீதம் யாரினாலும் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், அவ்வாறான குற்றச்சாட்டுக்களை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மறுக்கிறார். ஆனால், சட்டத்தரணிகள் சங்கங்கள் தொடங்கி, எதிர்க்கட்சிகள் வரையில் நீதிபதியின் நடவடிக்கைகள் மீது தலையீடுகளும் அழுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக விமர்சிக்கின்றன. இவ்வாறான நிலை, நாட்டின் நீதித்துறையை மிகமோசமாக பாதித்துவிடும்.

நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறி எங்கிருக்கிறார் என்பது இதுவரை யாருக்கும் உறுதியாக தெரியாது. இப்போதுதான், விசாரணைக்கான உத்தரவினை நீதி அமைச்சர் விடுத்திருக்கின்றார். இந்த விவகாரத்தில் இன்னும் தெளிவான விளக்கங்கள் கிடைக்க வேண்டும் என்றால், நீதிபதி சரவணராஜா தன்னை வெளிப்படுத்திக் கொண்டு பேச வேண்டும். ஏனெனில், அவருக்கு தொடர் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் இருந்தால் அதனை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டிருக்கலாம். அல்லது, அவரே பொது வெளியில் வெளிப்படுத்தியிருக்கலாம் என்ற வாதம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கை நீதித்துறையில் பணியாற்றும் நீதிபதிகள் பலரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ் பேசும் நீதிபதிகள் மீதான அச்சுறுத்தல்கள் என்பது வெளிப்படையானது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் அவற்றுக்கு அஞ்சாது பணியாற்றும் நீதிபதிகள் இன்னும் இருக்கவே செய்கிறார்கள். அப்படியான நிலையில், நீதிபதி சரவணராஜா தன்மீதான அச்சுறுத்தல்களை எதிர்த்து நின்று போராடியிருக்க வேண்டும் என்ற விடயத்தை புறந்தள்ள முடியாது.

அந்தவகையில், நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் கேள்விகளுக்கு அப்பாலானதாக மாறுகின்றது.

இலங்கையில் அரசாங்கம், நீதித்துறை என்று அனைத்துத் துறைகளையும் தாண்டிய அதிகாரம் பெற்றது பௌத்த சிங்கள பீடங்களும், அதன் துணைச் சக்திகளும். நாடு, பௌத்த சிங்கள அதிகார பீடம் என்கிற அச்சில்தான் சுற்றிக் கொண்டிருக்கின்றது. அப்படியான நிலையில், அந்த அதிகார பீடத்தினை கேள்வி கேட்கும் தரப்புக்கள் மீதான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் எவ்வாறானதாக இருக்கும் என்பதை இலகுவாக புரிந்து கொள்ள முடியும். அவற்றையெல்லாம் எதிர்கொண்டுதான் மக்களுக்கான நீதியை ஒரு சில நீதிபதிகள் நிலை நிறுத்துகிறார்கள். மற்றப்படி, இலங்கையின் இயங்குநிலை என்பது எப்போதும் மாறப்போவதில்லை.



## வாழ்வியல் தரிசனம்

எம்மவர்களின் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்போது, அங்கு ஆக்ரோஷமாகப் பேசி, தங்கள் திறமையை காட்டிக்கொள்வார்கள். இத்தகைய கூட்டங்களின்போது, அங்குள்ள அங்கத்தினர்கள் தங்களின் பழைய பகைமைகளைக் கூட்டத்தில் காட்டிக்கொள்வதுண்டு.

வருடாந்த பொதுக்கூட்டங்களில் அங்கத்தினரிடையே பதவிகள் தெரிவுசெய்யப்படும். அப்பொழுதுதான் அவர்களின் உண்மை முகம் தெரியவரும்.

நண்பர்களாக இருந்தவர்களிடையே மனஸ்தாபங்கள் வெளப்படும். சிலர் கோபத்துடன் வெளயேறிவிடுவார்கள். பலர் அங்கு குழுக்காக இயங்கத் தொடங்கிவிடுவார்கள். வீட்டுக்கு வீடு வாசல்படிபோல், ஊருக்கு ஊர் பொதுவாக கூட்டங்கள் இப்படித்தான் இப்போது நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களைப் பார்க்கும் ஊரவர்களுக்கு கலகலப்பாகத்தான் இருக்கும்.

ஒற்றுமையாக கூட்டம் கூடி, செய்ய வேண்டிய கருமங்களை வினைத்திறனுடன் செய்வதை விடுத்து, நீயா, நானா எனப் போட்டியிடுதல், சண்டைக்கு ஆயத்தமாதல், கண்டபடி வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்றவை வெட்டகப்பட வேண்டியவை.

பதவிகளைக் கேட்டு, அதன் பின்னால் ஓடக்கூடாது. அது தானாக வந்தால்த்தான், பதவி வகிப்பவருக்கும் கௌரவம். பதவிக்குரிய பொறுப்பும் காரியங்களும் நிறைவேற்றப்படும். வெறும் காசுக்காகப் பதவியைப் பெறுபவர்களால் காரியங்கள் சித்தியடைவதில்லை. பொதுநல விடயங்களில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதுவே, நாகரிகமாகும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன

திருகோணமலை- கண்டி பிரதான வீதி மட்டிக்களி கலப்பு பகுதியில் கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டு வருவதை சமூக அபிவிருத்தி கட்சி மற்றும் பொதுமக்கள் எதிர்த்துள்ளனர்.

திருகோணமலை நகர சபை தீயணைப்பு படை வீரர்களும், நகர சபை ஊழியர்களும் கண்டல் தாவரங்களை வெட்டி சேதப் படுத்தியுள்ளனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த மரங்களை வெட்ட வேண்டாம் என பொதுமக்கள் மற்றும் சமூக அபிவிருத்தி கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் குகதாசன் ஆகியோர் கோரிக்கை விடுத்ததை அடுத்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வீதியினூடாக செல்லும்போது கடல் விளங்குவதிலை என கூறி குறித்த மரங்களை வெட்டியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த மரம் வெட்டுவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவை தொடர்பு கொண்டு கேட்டபோது, ஆளுநர் இவ்வாறான விடயங்களை சொல்லவில்லை எனவும் உறுதியளித்துள்ளனர்.

ஆனாலும் இதுகுறித்து சமூக அபிவிருத்திக் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் குகதாஸ் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்துல்சலாம் யாசீம்

# மதுவால் தினமும் 50 பேர் மரணம்



ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 3ஆம் திகதி சர்வதேச மதுபான தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மதுபானம் அருந்துவதால் உலகளவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் 3 மில்லியன் இறப்புகள் இடம்பெறுவதுடன், பல நோய்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதற்கு மதுபானம் அருந்துதல் முதன்மைக் காரணமாக அமைகின்றது.

மேலும், கல்லீரல் ஈரல் அழற்சி, புற்றுநோய் மற்றும் வீதி விபத்துகள் உட்பட தொற்றாத நோய்களால் ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் பாதிப்படைகின்றனர். மதுபானம் அருந்துவதால் இலங்கையில் தினமும் 50 பேர் இறக்கின்றனர்.

மதுபான வரி மூலம் கிடைக்கும் வருவாயைக் கணக்கிடுவதனால் மாத்திரம் அரசின் வருமானத்தை கணிக்க முடியாது. மதுபானம் அருந்துவதால் அவர்களின் உடல் நலம், பொருளாதாரம் மற்றும் இதர செலவுகளுக்கு அரசு மேற்கொள்ளும் நிதிச் செலவுக்கும், மதுபான வரியின் அளவுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் கணக்கிட்டு, மதுபான வரித் தொகை அரசுக்கு வருமானமாக அமைகின்றதா இல்லையா என்பதை அறிவியல் பூர்வமாகக் கணக்கிட வேண்டும்.

2022ஆம் ஆண்டில் மதுபான வருமானம் 165.2 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் (இலங்கையில் மதுபானக் கட்டுப்பாட்டிற்கான முதலீட்டு சபை) 2023இல் நடத்திய ஆய்வின்படி, இலங்கையில் மதுபான பாவனையால் ஏற்பட்ட சுகாதார மற்றும் பொருளாதார பாதிப்புகள் 237 பில்லியன் ரூபாவாகும். மதுபானத்தில் பயன்பாடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் வசீகரமான இயற்கை அழகை ரசிப்பதற்காகவே வருகின்றனர். மாறாக மதுபானம் அருந்துவதற்காக வருபவர்கள் அல்ல என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. சுற்றுலாப் பயணிகளுடன் நடத்தப்பட்ட ஆய்வில், சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் பெயர்பலகை போடுதல், பாதுகாப்பு, சுத்தமான கழிப்பறை வசதிகள் போன்றன இருக்க வேண்டுமென்பதே முக்கியமான கோரிக்கைகளாக குறிப்பிட்டுள்ளனர்.

நயவஞ்சகத் திட்டம்

சதொச விற்பனை நிலையங்களில் மதுபான விற்பனைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதன் மூலம் இலகுவாக மதுபானம் கிடைப்பது அல்லது கிடைப்பனவு அதிகரிப்பதுடன் மதுபான பாவனை அதிகரிக்கின்றது. இதுபோன்ற பல்பொருள் அங்காடிகளுக்கு குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகமாக வருகை தருவதனால், மதுபானத்தை அழகாக பொதி செய்து வைத்திருப்பதை பார்ப்பதன் மூலம் மதுபானத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு, மதுபானம் அருந்தத் தூண்டுகிறது.

இது, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைப் பயன்படுத்தி, தங்கள் சொந்தப் பிரசாரத்தை மேற்கொண்டு, விற்பனையை அதிகரிக்க, மதுபான நிறுவனங்களின் நயவஞ்சகத் திட்டமாகும்.

### போலியான கூற்றுக்களை வெளியிடுதல்

தற்போது மதுபானத்தின் விலை அதிகமாக உள்ளதால், சட்டவிரோத மதுபானம் விற்பனை அதிகரித்து, அதனால் அரசின் வரி வருவாய் குறைந்துள்ளதால், விலையை குறைக்க வேண்டும் என்ற கருத்து மதுபானம் நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சட்டப்பூர்வ மதுபானத்தின் விலையை குறைப்பது சட்டவிரோத மதுபானம் அருந்துவதை கட்டுப்படுத்துவதற்கு ஒரு பயனுள்ள உத்தியாகக் கருத முடியாது. 1995ஆம் ஆண்டில், சட்டவிரோத மதுபானம் பயன்பாட்டைக் குறைப்பதற்காக பியர் மீதான வரிகள் கடுமையாக குறைக்கப்பட்டன. இதன் விளைவாக பியர் நுகர்வு அதிகரித்தது.

மதுபானம் பயன்படுத்துவோரின் சமூக நிலைகள், பயன்பாட்டின் எதிர்பார்ப்புகள், சட்டப்பூர்வ மதுபானத்தின் விலை உயர்வு போன்ற காரணங்களால், சட்டவிரோத மதுபானத்துக்கு மாறுவது நடைமுறையில் நடப்பதில்லை.

**கல்லீரல் ஈரல் அழற்சி, புற்றுநோய் மற்றும் வீதி விபத்துகள் உட்பட தொற்றாத நோய்களால் ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் பாதிப்படைகின்றனர். மதுபானம் அருந்துவதால் இலங்கையில் தினமும் 50 பேர் இறக்கின்றனர்**

### சூத்திரத்தை அறிமுகப்படுத்தல்

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, மதுபான வரிவிதிப்பு மற்றும் விலை நிர்ணயக் கொள்கைகள் மிகவும் செலவு குறைந்த மதுபான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. மதுபானத்தின் மீதான வரிகளை அதிகரிப்பது புதிய பாவனையாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் தற்போதைய பாவனையாளர்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது.

**பல்பொருள் அங்காடிகளுக்கு குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகமாக வருகை தருவதனால், மதுபானத்தை அழகாக பொதி செய்து வைத்திருப்பதை பார்ப்பதன் மூலம் மதுபானத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு, மதுபானம் அருந்தத் தூண்டுகிறது. இது மதுபான நிறுவனங்களின் நயவஞ்சகத் திட்டமாகும்**

மதுபானம் அருந்துவதால் நாட்டுக்கு ஏற்படும் சுகாதாரச் செலவுகளை ஈடுகட்ட தேவையான அரசாங்க வருவாயையும் இது வழங்குகிறது. சர்வதேச நாணய நிதியம் 2023இல் நம் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, 2024 ஜனவரி 1ஆம் திகதி அரசின் வரி வருவாயை அதிகரிக்கவும், மதுசாரத்தின் பயன்பாட்டைக் குறைக்கவும் பணவீக்கத்திற்கு விகிதாசார மதுபான வரிகளுக்கான விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் அரசின் சுகாதாரச் செலவைக் குறைக்கலாம்.

எனவே, 2024 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம், பணவீக்கத்திற்கு விகிதாசாரமாக மதுசார வரிகளுக்கான விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு, வரியை வசூலிப்பதன் மூலம் நாட்டில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை முகாமை செய்வதற்றகாக, மதுபானத்துக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் தர்க்க ரீதியான வரிக் கொள்கை மிகவும் முக்கியமானது.

நாட்டுக்கு வரி வருவாய் இழப்பு மற்றும் மதுபானத்தினால் ஏற்படும் பாதிப்புகளினால் ஏற்படும் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இலகுவாக மதுபானம் கிடைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் என்ற வகையில் வலியுறுத்துகின்றோம்.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

# இராணுவத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள்...



இராணுவத்தின் 24ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பத்திரணவின் வழிகாட்டலில் அம்பாறை கல்முனை 18ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கல்முனை சிங்கள மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பாறுக் ஷிஹான்







# புதிய காரியாலயம்

உலக வங்கி நிதியுதவியின் கீழ் 123 மில்லியன் ரூபாய் செலவில் இரத்தினபுரியில் புதிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தலைமையில் சனிக்கிழமை (30) இடம்பெற்றது.

சிவா ஸ்ரீதரராவ்









# சிறுவர் தினக் கொண்டாட்டம்

நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவு பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் புதன்கிழமை (03) இடம்பெற்றுள்ளது. பெற்றோரின் பங்களிப்புடனும், ஆசிரியர்களின் வழிகாட்டலிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் பாலர் பாடசாலை மாணவர்களின் பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. சிறுவர் உரிமை தொடர்பான பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

செ.திவாகரன்

# அடிக்கல் நடும் நிகழ்வு...

மதுரங்குளி கனமூலை தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் இருமாடி கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் கனமூலை பெரிய பள்ளி வளாகத்தில் ஊர் ஜமாஅத்தினர் முன்னிலையில் அண்மையில் இடம்பெற்றது.

தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை ஐ.எஸ்.ஆர்.சீ.(ISRC) அமைப்பின் பணிப்பாளர் அனுசரணையில் அப்துர் ரஹ்மான் மௌலவி ஊடாக அனுமதி கிடைத்தது.

எம்.யூஎம்.சனூன்







# பணிப்பாளர் நியமனம்

கிழக்கு மாகாண பதில் கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு வலய கல்விப் பணிபாபாளராக பதவி வகித்து வந்த திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் தமது கடமைகளை திங்கட்கிழமை (02) பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தனது 60 வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுநரால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எப்.முபாரக்



# திறன் வகுப்பறை திறந்து வைப்பு

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (Ratnam Foundation-UK) அமைப்புக்களினால் முதலாம் கட்டத்தில் பன்னிரண்டு பாடசாலைகளிலும் இரண்டாம் கட்டத்தில் ஒன்பது பாடசாலைகளிலும் திறன் பலகையுடனான வகுப்பறைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன. இவற்றில் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட ஒன்பது பாடசாலைகளில் ஒன்றான பெரியவிளான் றோ.க.த.பாடசாலையில் திறன்வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வு சென்ற வாரம் நடைபெற்றது.

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம்



நூருல் ஹுதா உமர்

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் பல்வேறு நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்றுள்ளன.

வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.ஆஸாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் கௌரவ அதிதியாகவும், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

ஜேர்மனியின் Deutsche Welle ஊடக நிறுவனத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய விசேட நேர்காணலின் விபரம்,

## மனித உரிமைகள் பேரவையின்

# நிலைப்பாடு தவறானது



கேள்வி - விக்ரமசிங்க அவர்களே, Deutsche Welle இற்கு உங்களை வரவேற்கிறேன். எங்களுடன் இணைந்ததற்கு நன்றி. பெர்லின் பேச்சுவார்த்தைகள் முடிந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர், நாட்டிற்குச் செல்லும்போது உங்களுடன் எடுத்துச் செல்ல ஏதாவது நல்ல செய்தி இருக்கின்றதா?

எனது நாட்டிற்கு நான் எடுத்துச் செல்லும் என்னவென்றால், எங்களுக்கிடையிலான இடைவெளி குறைந்துவிட்டது என்பதுதான். குறிப்பாக ஐரோப்பாவின் பக்கத்தில் இருந்து இது நடந்துள்ளது. பாரிஸ் காலநிலை மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகளும் நமது சிந்தனையை அறிந்திருப்பதால், அவை நமது எண்ணங்களோடு இணைந்து செல்கின்றன என்பதைக் கூறவதுதான் நான் பெர்லினுக்கு வரக்காரணமாகும்.

எங்களுக்கு இடையே இருந்த இடைவெளி குறைந்ததால், புரிதல் வளர்ந்து வருகிறது. குறிப்பாக ஐரோப்பிய தரப்புடன் இந்த புரிதல் வளர்ந்து வருகிறது என்ற செய்தியை எடுத்துச் செல்ல முடியும்.

பாரிஸ் காலநிலை மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஐரோப்பிய யூனியனுக்குள் இருக்கும் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் நமது சிந்தனையை அறிந்து, நமது சிந்தனையுடன் உடன்படுகின்றன. தற்போதுள்ள சில பிரச்சினைகளை அவர்களுடன் சேர்ந்து தீர்க்கும் வழியைக் கண்டறிய முயற்சிக்க வேண்டும் என்று கூறுவதற்காகவே வருகை தந்தேன்.

கேள்வி - சர்வதேச நாணய நிதியம் (IMF) உங்கள் சிந்தனையுடன் முற்றிலும் இணைந்ததாகத் தெரியவில்லை, இல்லையா? கடந்த சில நாட்களில், 15% இலக்குகளை எட்டாததால், அடுத்த பேச்சுவார்த்தைகள் நிலுவையில் உள்ளன. இரண்டாம் தவணைக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. வரிவிதிப்பதில் உங்களுக்கு மேலும் சிக்கல் உள்ளது என்று அர்த்தம். இந்தப் பிரச்சினை மிகவும் தீவிரமானது போல் தெரிகிறது. இந்த செயல்முறையை துரிதப்படுத்த உங்களுக்கு விசேட திட்டம் ஏதேனும் உள்ளதா?

இரண்டாம் தவணைக் கொடுப்பனவை நிறுத்தக் கூடாது என்ற உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். இந்த வருடம் நாம் நிறைவேற்றிய விடயங்களின் பலன் அடுத்த வருட ஆரம்பத்தில் தெரியும் என்று நம்புகிறோம்.

இலக்குகளைப் பற்றி பேசும்போது, சில இலக்குகளை அடைவது கடினம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இதுகுறித்து அவர்களிடம் எடுத்துரைத்துள்ளோம். அந்த இடைவெளியை எவ்வாறு சரிசெய்வது என்பது பற்றி இப்போது நாம் கலந்துரையாடுகிறோம். மேலும் சில முன்மொழிவுகளை நாங்கள் ஏற்கவில்லை. ஏனெனில் அவை சாதாரண மக்களுக்கு சுமையாக அமையலாம் என நினைக்கின்றோம். மாற்று முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. நான் வருவதற்கு முன்பே மாற்று வழிகளை பரிந்துரைத்திருந்தாலும், அவர்கள் மறுநாள்திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

கேள்வி - குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஆனால் உங்கள் நாட்டில் வரி அறவீட்டில் சிக்கல்கள் உள்ளன. ஆறு முறை ஆட்சியில் இருந்த உங்களுக்கு இவை புதிதல்ல, இல்லையா?

புதிய வருமான அதிகார சபையொன்று வேண்டும் என்று கூறுகிறோம். நான் 2003ஆம் ஆண்டிலும் இதனைப் பரிந்துரைத்தேன். அதனால்தான் 2004 தேர்தலில் தோல்வியடைந்தேன். ஆனால் இது வரி ஏய்ப்பு தொடர்பாக உள்ள ஒரு பிரச்சினை அல்ல.

வரி ஏய்ப்பு பிரச்சினையை ஓராண்டில் தீர்க்க முடியாது. இதுகுறித்து கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் எங்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். அவற்றில் பெரும்பாலானவற்றுடன் நாங்கள் உடன்பட்டுள்ளோம். ஆனால், இந்த நேரத்தில் பணத்தை எங்கே தேடப் போகிறோம் என்பதுதான் இப்போதைய கேள்வி. இந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படும்.

கேள்வி - அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

அடுத்த வாரத்துக்குள் தீர்ந்துவிடும் என நினைக்கிறேன்.

கேள்வி - வறுமை குறித்து ஒரு பெரிய பிரச்சினை உள்ளது. சேவ் த சில்ட்ரன் இன்டர்நேஷனல் அமைப்பு இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு கடுமையான உணவுப் பற்றாக்குறையை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அதை வெகுவாக குறைத்துள்ளோம். ஐஎம்எஃப் இன் இரண்டாம் தவணை உதவிக்குப் பின்னர், அடுத்த கட்ட பணிகள் குறித்து சிந்தித்து வருகிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது, இதுபோன்ற சூழ்நிலைகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. மக்களுக்கு உணவு மற்றும் எரிபொருள் இருக்கவில்லை. தொழில்கள் வீழ்ச்சியடைந்தன. ஆனால் தற்போது அதிலிருந்து மீண்டு வருகிறோம். உதாரணமாக, சுற்றுலாத் துறையை எடுத்துக் கொண்டால், இன்று அது படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது.

கேள்வி - கல்வித்துறையிலும் நெருக்கடிகள் உள்ளன?

கல்வித்துறை ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. 2024, 2025இற்குள் அதை சாதாரண நிலைமைக்கு கொண்டுவர முயற்சிக்கிறோம். இலங்கையில் கல்வித்துறையில் நீண்டகால சீர்திருத்தங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். அப்போது இந்தக் குற்றச்சாட்டு எழாது.

கேள்வி - இது குற்றச்சாட்டு அல்ல. இதில் வித்தியாசம் உள்ளது. ஓர் அரசாங்கம் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எடுக்கும் நேரத்திற்கும், பெற்றோர் குழந்தையை வளர்க்க எடுக்கும் நேரத்திற்கும் வித்தியாசம் உள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த ஆண்டுதான் பொருளாதாரத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. இந்த நேரத்தில், நாட்டில் பட்டினி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. வறுமை குறைந்து வருகிறது. அதிகமானோர் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். நாட்டில் மாற்றம் நிகழ்ந்து வருகிறது. நாட்டில் பட்டினி தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்ல மாட்டோம். பட்டினி தொடர்பான பிரச்சினையொன்று இருந்ததால் தான் அதனைத் தீர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். பட்டினி தொடர்பான நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவேன்.

கேள்வி - கடந்த இரண்டு வாரங்களில் இலங்கையில் பெரும் கவனத்தைப் பெற்ற ஒரு தலைப்பைப் பற்றி இப்போது பேசுவோம். அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் ஒரு பயங்கரவாத குழுவுடன் செய்த சதியாக ஊகிக்கப்படும் இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிக மோசமான பயங்கரவாதத் தாக்குதலைப் பற்றிய செனல் 4 தொலைக்காட்சி சேவை வெளியிட்ட விடயம் பற்றி கவனம் செலுத்தினால்?

செனல் 4 ஐ ஏன் இவ்வளவு முக்கியமானதாக கருதுகிறீர்கள்? நான் அவ்வாறு கருதவில்லை.

கேள்வி - இல்லை, நான் அவ்வாறு நினைக்கவில்லை.

பிரித்தானியாவில் பெரும்பாலான மக்கள் அவ்வாறு நினைக்கவில்லை என்று நான் நம்புகிறேன்.

கேள்வி- அதை முற்றாக நிராகரிப்பது நியாயமா?

செனல் 4ஐ பற்றி மட்டும் ஏன் கேள்வி கேட்கிறீர்கள்?

கேள்வி - நான் செனல் 4 ஐக் கேட்கவில்லை. இது தொடர்பாக மிக உறுதியான குற்றச்சாட்டு உள்ளது

ஊடகங்களின் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் காரணத்திற்காக நான் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? முன்னாள் சட்டமா அதிபர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஒரு குற்றச்சாட்டைப் பற்றி மாத்திரம் ஏன் கேட்கிறீர்கள்? ஏனையவற்றைப் பற்றியும் கேளுங்கள்.

கேள்வி - உண்மையில், செனல் 4 மட்டுமல்ல, கத்தோலிக்க திருச்சபையும் கூட விசாரணை நடத்துமாறு கேட்கிறது. முன்னாள் ஜனாதிபதி ஒருவரும் விசாரணை கோரியுள்ளார்?

அதைத்தான் நானும் கேட்கிறேன். அதை நீங்கள் என்னிடம் கேட்கவில்லை. நான் உங்களை வற்புறுத்திய பின்னர் தான் முன்னாள் ஜனாதிபதி விசாரணை கோருகிறார் என்று கூறுனீர்கள். நீங்கள் செனல் 4 செய்தியை முழுமையான உண்மை என்று நினைத்துக் கொண்டு தான் கேள்வி கேட்டீர்கள்.

கேள்வி - இதில் உள்ள விடயம் முழுமையான உண்மை அல்லவா?

செனல் 4 குற்றச்சாட்டுகள் தொடர்பில் நான் குழுவொன்றை நியமித்துள்ளேன். இந்த குழுவிற்கு முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமை தாங்குகிறார். மேலும், இந்த குழுவில் முன்னாள் விமானப்படை தளபதி மற்றும் சிரேஸ்ட சட்டத்தரணி ஒருவரும் உள்ளடங்குகிறார்.

கேள்வி - ஆணைக்குழுவின் சுயாதீனத்தை தவிர வேறு எதையும் செய்யும் திறன் இந்த ஆணைக்குழுவிற்கு இருப்பதாக யாரும் நம்பவில்லையா?

அது உங்கள் கருத்து, என்னுடையது அல்ல.

கேள்வி - இல்லை. நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்?

இல்லை

கேள்வி - நீங்கள் பதிலளிக்க விரும்பவில்லை என்றால், பதில் தேவையில்லை. ஆனால் நான் கேட்கலாம்.

இல்லை. அதாவது அது உங்கள் கருத்து மட்டுமே. எனது கருத்து அல்ல.

கேள்வி - கத்தோலிக்க திருச்சபை தான் இதைப் பற்றி பேசுகிறதா?

அதை மறந்துவிடுங்கள். நான் கத்தோலிக்க திருச்சபை பற்றி பேசவில்லை. உங்கள் கேள்விக்கு மட்டும் பதில் சொல்கிறேன். மேலும், நான் கத்தோலிக்க திருச்சபையுடனே தொடர்பு கொள்கிறேன். பேராயர் அவர்களுடன் அல்ல. கத்தோலிக்க திருச்சபைக்கு ஆணைக்குழுவின் அனைத்து அறிக்கைகளும் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. நான் அவை அனைத்தையும் கொடுத்தேன்.

கேள்வி - அவர்கள் எதிர்பார்ப்பது வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணையை?

அதுதான் அவர்கள் ஏற்றுக்கொண்ட சுயாதீன ஆணைக்குழு. நீங்கள் கத்தோலிக்க திருச்சபையுடன் தொடர்புபடவில்லை. ஆனால் நான் தொடர்பு கொள்கிறேன். மேலும் அவர்கள் என்னை வந்து சந்திக்கிறார்கள். அவர்கள் சந்திப்பது என்னையே, அன்றி உங்களை அல்ல. கையில் கடதாசியை வைத்துக்கொண்டு நீங்கள் இங்கே அமர்ந்து வாசிக்கின்றீர்கள். ஆனால் நான் கத்தோலிக்க திருச்சபையுடன் கலந்துரையாடினேன். நான் எனது நாட்டிற்குச் சென்றாலும் அவர்களுடன் கலந்துரையாடுவேன்.

இரண்டாவது விடயம், பாராளுமன்றத் தெரிவுக் குழு. ஏதேனும் விடுபட்டிருந்தால், அது குறித்து மீண்டும் பாராளுமன்றத் தெரிவுக் குழு நடவடிக்கை எடுக்கும். இறுதியாக என்ன செய்ய வேண்டும் என்பதை பாராளுமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன விவகாரம் தொடர்பாக கூறுவதென்றால், நான் நாடு திரும்பிய பிறகு அவரை சந்தித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளேன். இது தொடர்பாக அவரும் ஓர் ஆணைக்குழுவை நியமித்தார், இது குறித்து மேலும் விசாரணை தேவையா என்பது குறித்து அவருடன் கலந்துரையாடவுள்ளேன். எனக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை. இதற்கு தீர்வு காணவே நான் முயற்சிக்கிறேன்.

நீங்கள் பேராயர் கொடுத்த கடதாசியை எடுத்து அவர் பார்க்கும் வகையில் அதனை வாசிக்கின்றீர்கள். நீங்கள் கத்தோலிக்க திருச்சபையுடன் பேசியிருக்கிறீர்களா? நீங்கள் கத்தோலிக்க பாதிரியார்களிடம் பேசியிருக்கிறீர்களா?

கேள்வி- இல்லை. நான் பேசவில்லை.

அப்படியானால் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. இது முற்றிலும் தவறானது, எந்தவொரு பிரச்சினைக்கும் சர்வதேச விசாரணைகள் தேவையில்லை.

இங்கிலாந்தில் அப்படி நடக்கவில்லை. ஜெர்மனியில் அப்படி நடக்கவில்லை. உங்களிடம் என்ன இருக்கிறது நீங்கள் எந்த சர்வதேச விசாரணைகளில் பங்கேற்றீர்கள்? இங்கிலாந்து எதில் பங்கேற்றது? ஆதரவற்ற இலங்கையில் உள்ள எங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டும் ஏன் இப்படி செய்கிறார்கள்? நாங்கள் இரண்டாம் தர நாடுகள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

கேள்வி - இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை.

அப்படியானால் ஏன் கேட்கிறீர்கள்?

கேள்வி - ஏனெனில், 2008 முதல் இன்று வரை எதுவுமே நடக்காத ஆணைக்குழுக்கள் தொடர்பாக உங்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. என்னால் பட்டியலிட முடியும். உதலாகம, கற்றுக்கொண்ட பாடங்கள்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவே இதுவாகும். அதற்கெல்லாம் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்.

கேள்வி - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கை தொடர்பில் எந்த அளவிற்கு மோசமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அமெரிக்க காங்கிரஸின்ல் 12 பேர் உங்கள் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு பைடன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உண்மையில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகளை கண்டறிந்து அவற்றை சீரமைக்க உங்களால் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று அறிவிக்கப்பட்டது. நான் மேற்கூறிய விடயங்களை போன்றே அந்த ஆணைக்குழுவிற்கும் அதிகாரங்கள் இல்லை.

நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் பாரதூரமான பிரச்சினைகள் எவையும் ஏற்படவில்லை. அதனை நீங்கள் தவறாக புரிந்துகொண்டுள்ளீர்கள். அது ஜனாதிபதி ஆணைக்குழு அல்ல. நாம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை நிறுவுவது தொடர்பில் மேற்படி நாடுகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறோம். தற்போது கட்சிகளை போன்றே மேற்கத்திய நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம். செனட் சபை உறுப்பினர்களுக்கும் தலையீடு செய்ய முடியும். உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான சட்டத்தை வருட இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

கேள்வி - சில மாதங்களுக்கு முன்பாக வெளியாகியிருந்த ஐ.நா அறிக்கையை பார்த்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கேள்வி- நிராகரித்தவர்கள் யார்?

இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. அதனை யார் பெற்றுக்கொடுத்தது? ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையை நான் ஏற்கப்போவதில்லை.

கேள்வி - இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடு தவறானது என்றா கூறுகிறீர்கள்?

ஐக்கிய நாடுகள் சபை அல்ல மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு தவறானது.

கேள்வி - மனித உரிமைகள் பேரவை தவறு என்பதை போன்றே Amnesty ?

மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு தவறானது

கேள்வி - குற்ற புலனாய்வு ஒன்றை நீங்கள் செய்வீர்களா? உங்கள் அரசாங்கத்தின் சில அமைச்சர்களும் அதனை கோரியுள்ளனர்?

> காணாமல் போனோர் தொடர்பிலான ஆணைக்குழு அது தொடர்பில் செயற்படும். அந்த செயற்பாடுகள் சில காலமாக இடம்பெற்று வருகின்றன

அமைச்சர்கள் யாவர்?

கேள்வி - பெர்னாண்டோ என்று நினைக்கிறேன்?

எந்த பெர்னாண்டோ?

கேள்வி - குற்றப்புலனாய்வு பிரிவின் ஊடாக விசாரணை ஒன்றை நடத்த நீங்கள் தயாரா ?

பெர்னாண்டோ என்ற பெயர் கொண்ட இரு அமைச்சர்கள் உள்ளனர். வர்த்தக மற்றும் வணிக அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகிய இருவரும் பெர்னாண்டோக்கள் ஆவர். அவர்களில் எவரும் என்னிடத்தில் இந்த கோரிக்கையை முன்வைக்கவில்லை. நீங்கள் பாரதூரனமாக குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளீர்கள் அதனால் விவரமாக கூறுங்கள்.

கேள்வி-பாரதூரமான குற்றச்சாட்டு என்ன?

எனது அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்களில் விசாரணை அவசியம் எனக் கூறியது யாவர் என்பது தொடர்பில்

கேள்வி- அது குற்றச்சாட்டு அல்ல உண்மையான விடயம்?

நீங்கள் சொல்வதில் உண்மையில்லை ஒருவர் மாத்திரமே உள்ளார்.

கேள்வி - இதுபற்றி தேடிப்பாருங்கள் என்ற கோரிக்கையை முன்வைக்க முடியுமா?

சட்டத்திற்கு இணங்க உங்கள் நாட்டை போலவே எனது நாட்டிலும் விசாரணைகளை நடத்தும் இயலுமை பொலிஸாருக்கு மட்டுமே உள்ளது. அதனையடுத்து பொலிஸார் நீதிவானுக்கு வழங்கும் அறிக்கையை மையப்படுத்தி அவர் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வார்.

கேள்வி - குற்றப்புலனாய்வு திணைக்களத்தை அழைத்து விசாரணையை நடத்த நீங்கள் விரும்புவீர்களா?

பதில்- உண்மையாகவே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

கேள்வி - அதன் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சர்வதேச மேற்பார்வையாளர்கள் அல்லது அவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் உங்களுக்கு சிக்கல் உள்ளதா?

இல்லை உங்கள் நாட்டில் காணப்படும் வழக்குகளில் சர்வதேச மேற்பார்வையாளர்களின் பங்களிப்பு உள்ளதா?

கேள்வி - 60,000 - 100,000 இடைப்பட்ட அளவிலான இலங்கையர்கள் காணாமல் போயுள்ளனர் நீங்கள் தற்போதும் இல்லை என்று சொல்கிறீர்கள்?

பதில்-இல்லை. எண்ணிக்கை குறைவு என்றே நினைக்கிறேன்.

கேள்வி -அது தொடர்பில் செயற்பட வேண்டும் அல்லவா?

காணாமல் போனோர் தொடர்பிலான ஆணைக்குழு அது தொடர்பில் செயற்படும். அந்த செயற்பாடுகள் சில காலமாக இடம்பெற்று வருகின்றன. நான் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடம் மட்டுமே ஆகியுள்ளது.

கேள்வி - ஆறு தடவைகள் பிரதமராக பதவி வகித்துள்ளீர்கள் என்ற வகையில் இதுவும் உங்களது பொறுப்பாகும்?

நான் பிரதமராக பதவி வகித்த காலத்திலேயே அதற்கான ஆரம்ப புள்ளி இடப்பட்டது.

கேள்வி - நான் இறுதியாக கேட்கப்போகும் கேள்வியில் உங்களுக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். இருப்பினும் இந்த கேள்வி மிகவும் பாரதூரமானது என நான் அறிவேன். இலங்கை பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டல் என்பவற்றை செய்யவில்லை. அது குறித்து உங்களது நிலைப்பாட்டை பலரும் எதிர்பார்த்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறார். அவர்கள் அனைவருக்கும் அதுபற்றிய புரிதல் உள்ளது. சர்வதேச தரப்புக்களுடன் இணைந்து அதனை சரிசெய்வோம். நாம் அவர்களுடன் இணைந்துச் செயற்படுவோம். அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நாம் கலந்தாலோசிப்போம்.


கேள்வி -இது மிகவும் சிறந்த விடயமாகும்.

நீங்கள் என்னிடத்தில் கேள்விகளை கேட்டீர்கள் நானும் பதிலளித்தேன். அது கவலைக்குரிய விடயமல்ல. நான் மனித உரிமைகளை மதிப்பவன் என்ற வகையில் அது தொடர்பிலான நற்பெயரும் என்னை சார்ந்துள்ளது.

நன்றி ஜனாதிபதி ஊடகப்பிரிவு (தமிழ்)

அமெரிக்கா

# சபாநாயகர் பதவி நீக்கம்



அமெரிக்க பிரதிநிதிகள் சபை, சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியை சபையின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கு 216க்கு 210 வாக்குகள் வாக்களித்துள்ளது.

அமெரிக்க வரலாற்றில் சபாநாயகர் ஒருவர் பதவி நீக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். 216-210 வாக்குகள் மெக்கார்த்தியை அகற்ற ஜனநாயகக் கட்சியினருடன் சேர்ந்து எட்டு குடியரசுக் கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

புதிய சபாநாயகர் நியமிக்கப்படும் வரை சபை தற்போது முடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று ஆரம்பமாகும் உலகக் கிண்ணம்




சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டி உலகக் கிண்ணத் தொடரானது அஹமதாபாத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள நடப்புச் சம்பியன்களான இங்கிலாந்துக்கும், கடந்த முறை இங்கிலாந்திடம் தோல்வியடைந்த நியூசிலாந்துக்கும் இடையிலான போட்டியுடன் ஆரம்பமாகின்றது.

கிரிக்கெட்டானது இருபதுக்கு 20 போட்டிகளை நோக்கி நகர்ந்து கொண்டு செல்கையில் கவனிப்பைப் பெறும் இறுதி உலகக் கிண்ணத் தொடராக இந்த 13ஆவது உலகக் கிண்ணம் அமைந்தால் ஆச்சரியப்படுவதுக்கில்லை.

இந்தியாவில் இம்முறை உலகக் கிண்ணம் நடைபெறுகின்ற நிலையில் அந்த அணி, இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் அதிக தடவைகளாக ஐந்து தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலியா உள்ளிட்டவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய அணிகளாகக் கருதப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் எந்தவொரு எதிர்பார்ப்புமில்லாது களமிறங்குகின்ற நிலையில் 1996ஆம் ஆண்டு ஆச்சரியத்தை ஏற்படுத்துமா என்பதே ரசிகர்களில் ஏக்கமாகவுள்ளது.

மற்றும்படி இந்த உலகக் கிண்ணத்தைப் பொறுத்த வரையில் ஷுப்மன் கில், கிளென் மக்ஸ்வெல், ட்ரெண்ட் போல்ட், மிற்செல் ஸ்டார்க், பாபர் அஸாம் போன்றோர் பிரகாசிப்பர் எனக் கருதப்படுகிறது.

குஜராத்



# டொனிக்குக்கு பதிலாக பினாயில் கொடுத்த தாதி

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்ட 11 மாத கைக்குழந்தை உயிரிழந்துள்ளது.

வைத்தியசாலையில் குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள், விட்டமின் டொனிக்கை மருந்து சீட்டில் எழுதி கொடுத்துள்ளனர்.

மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டு அந்த குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. விட்டமின் டொனிக் என ஒரு போத்தலை தாதி கொடுத்து இருக்கிறார். குழந்தையின் தாயும் தாதி கூறியபடி டொனிக்கை கொடுத்துள்ளார். அதை குடித்த மறுநிமிடமே குழந்தையின் வாயில் இருந்து நுரையாக வந்து குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த குழந்தையின் தாய், டொனிக்கை முகர்ந்து பார்த்தபோது பினாயில் வாடை வந்துள்ளது. இதையடுத்து, அவர் பொலிஸில் புகார் அளித்துள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

கர்நாடகா



# பிறந்தநாளில் நேர்ந்த சோகம்

பிறந்த நாள் உள்ளிட்ட கொண்டாட்டங்களின் போது ஹீலியம் பலூன்களைக் கட்டி வைக்கும் கலாசாரம் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், இந்தியாவின் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த நபர் ஒருவர் தனது மகளின் பிறந்தநாளை வீட்டில் கொண்டாடியுள்ளார். இதனை முன்னிட்டு, அக்கம்பக்கத்தில் உள்ள சிறுவர்கள் ஏராளமானோர் அங்கு வருகை தந்துள்ளனர் . அப்போது, வீட்டின் மொட்டை மாடியின் மேல் பறக்கவிடப்பட்டிருந்த ஹீலியம் பலூன், திடீரென உயர்மின் அழுத்த கம்பியில் உரசி வெடித்து சிதறியுள்ளது. அப்போது, தீப்பொறி விழுந்து 3 சிறுவர்களுக்கும் கை மற்றும் முகத்தில் பலத்த தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சம்பியன்ஸ் லீக்:

# லென்ஸிடம் தோற்ற ஆர்சனல்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், பிரெஞ்சு லீக் 1 கழகமான லென்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு பி போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் தோற்றுள்ளது. இதேவேளை, இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் வென்றுள்ளது.

இந்நிலையில், துருக்கியக் கழகமான கலடசரேயுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றுள்ளமை குறிப்பிடத்தகக்து.

உலகக் கிண்ண பயிற்சிப் போட்டியில்

# இலங்கையை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், கௌகாத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் இலங்கை தோற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை, குசல் மெண்டிஸின் 158 (87) ஓட்டங்களுடன் 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்துவீச்சில், மொஹமட் நபி 4 மற்றும் முஜீப் உர் ரஹ்மான், பஸல்ஹக் பரூக்கி, நவீன்-உல்-ஹக், ரஷீட் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் மழை காரணமாக 42 ஓவர்களில் 257 ஓட்டங்களென்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 119 (92), ரஹ்மத் ஷாவின் 93 (82) ஓட்டங்களோடு 38.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. கசுன் ராஜித ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இதேவேளை, ஹைதரபாத்தில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் பாகிஸ்தானை அவுஸ்திரேலியா வென்றது.

கனடா



# "இந்தியாவுடன் ஆக்கப்பூர்வமான உறவை தொடர்வோம்"

கனடாவின் ஒட்டாவா நகரில் பத்திரிகையாளர்களை சந்தித்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் இந்தியாவில் இருக்கும் கனடா தூதரக அதிகாரிகளை திரும்பப்பெற இந்தியா வலியுறத்தியதாக வெளியான தகவல் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு பதிலளித்து அவர் பேசுகையில், கனடாவுக்கு இந்தியாவில் தூதரக அதிகாரிகள் இருப்பது முக்கியம். வெளிப்படையாக, நாங்கள் இப்போது இந்தியாவுடன் மிகவும் சவாலான நேரத்தைக் கடந்து வருகிறோம். ஆனால் நிலைமையை மோசமடைய செய்ய நாங்கள் விரும்பவில்லை.

மேலும், இந்த கடினமான நேரத்தில் இந்தியாவுடன் ஆக்கபூர்வமான உறவை தொடர்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அந்த முக்கியமான பணியை நாங்கள் தொடர்ந்து செய்யப்போகிறோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியா

# கண்களை கட்டி கின்னஸ் சாதனை

மலேசியாவை சேர்ந்த 10 வயதான புனிதமலர் ராஜசேகர், தன்னுடைய இரண்டு கண்களையும் முழுமையாக கட்டிக்கொண்டு செஸ் காய்களை எந்தவித தவறும் இன்றி சரியாக செஸ் பலகையில் 45.72 நொடிகளில் அடுக்கி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

இதன்மூலம் கண்களைக் கட்டிக் கொண்டே அதிவேகமாக செஸ் பலகையை செட் செய்தவர் என்பதற்கான உலக சாதனையை அவர் படைத்துள்ளார். அச்சிறுமி படிக்கும் பள்ளியிலேயே இந்த உலக சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதைப் பற்றி பேசிய சிறுமி, தன்னுடைய தந்தையுடன் சேர்ந்து தினசரி செஸ் விளையாடுவேன் என்று கூறினார். மேலும் இந்த உலக சாதனை செய்தது தன்னுடைய வாழ்வில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

# நான்காமிடத்துக்கு முன்னேறிய வோர்னர்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் நான்காமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 56 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. பாபர் அஸாம்,
2. ஷுப்மன் கில்,
3. றஸி வான் டர் டுஸன்,
4. ஹறி டெக்டர்,
5. டேவிட் வோர்னர்,
6. இமாம்-உல்-ஹக்,
7. குயின்டன் டி கொக்,
8. ஹென்றிச் கிளாசென்,
9. விராட் கோலி,
10. றோஹித் ஷர்மா.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

மொஹமட் சிராஜ், ஜொஷ் ஹேசில்வூட், 3. முஜீப் உர் ரஹ்மான், 4. ரஷீட் கான், 5. ட்ரெண்ட் போல்ட், 6. ஷகீன் ஷா அஃப்ரிடி, 7. அடம் ஸாம்பா, 8. மிற்செல் ஸ்டார்க், 9. மற் ஹென்றி, 10. மொஹமட் நபி. முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. சிகண்டர் ராசா, 4. ரஷீட் கான், 5. அஸாட் வலா.

ஆசியப் போட்டிகள்: ஆண்கள் கிரிக்கெட்டில்

# ஆப்கானிஸ்தானிடம் தோற்ற இலங்கை

சீனாவில் நடைபெற்று வரும் ஆசியப் போட்டிகளின் ஆண்கள் கிரிக்கெட்டில், ஹங்சூவில் நேற்று நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான மூன்றாவது காலிறுதிப் போட்டியில் தோற்ற இலங்கை தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

ஆப்கானிஸ்தான்: 116/10 (18.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: நூர் அலி ஸட்ரான் 51 (52), ஷகிடுல்லாஹ் 23 (14), மொஹமட் ஷஷாட் 20 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவான் துஷார 4/17 [3], சஹான் ஆராச்சிகே 2/26 [3.3], லஹிரு சமரக்கோன் 1/10 [3], விஜயகாந்த் வியாஸ்காந்த் 1/28 [4], நிமேஷ் விமுக்தி 0/13 [4])

இலங்கை: 108/10 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஹான் ஆராச்சிகே 22 (29), லசித் குறொஸ்புள்ள 16 (12), விஜயகாந்த் வியாஸ்காந்த் ஆ.இ 13 (19), அஷேன் பண்டார 13 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: குவைஸ் அஹ்மட் 3/16 [4], குல்படின் நைப் 3/28 [4], ஸகிர் கான் 1/16 [4], கரிம் ஜனட் 1/7 [1.1])

இந்நிலையில், நான்காவது காலிறுதிப் போட்டியில் மலேஷியாவை வென்ற பங்களாதேஷ் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 05 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.